கடலூர் மேற்கு மாவட்டம் திட்டக்குடி சட்ட மன்றத் தொகுதி மங்களூர் தெற்கு ஒன்றியம் கொரக்கைவாடி, லட்சுமணாபுரம், பனையாந்தூர் ஆகிய கிராமங்களில் அமைச்சர் சி.வி.கணேசன் பொது மக்களிடம் குறைகளை கேட்டறிந்து நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் மங்களூர் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் பா. செங்குட்டுவன் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் கே. என்.டி.சங்கர் மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.

தீவிர வாக்காளர் சிறப்பு திருத்தத்தைத் கண்டித்து

கடலூர் கிழக்கு - மஞ்சக்குப்பத்தில் மாபெரும் ஆர்ப்பாட்டம்!

மாவட்டச் செயலாளர் – அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் அறிவிப்பு!

கடலூர், நவ.10-

தமிழ்நாட்டில் தொடங்கியுள்ள தீவிர வாக்காளர் சீராய்வு பட்டியலை (SIR) எதிர்த்து மாண்புமிகு தமிழ் நாடு முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்களின் ஆணைக்கிணங்க, வருகின்ற 11.11.2025 செவ்வாய்க்கிழமை காலை 10 மணி அளவில் கடலூர், மஞ்சக்குப்பம் , தலைமை அஞ்சல் நிலையம் எதிரில் கடலூர் மாவட்ட மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகளின் சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது அனைவரும் தவறாமல் கலந்துகொள்ள வேண்டுமென கடலூர் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் - அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவித்துள்ளார்.



இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:-

தமிழ்நாட்டில் சட்டப் பேரவை தேர்தல் சில மாதங்களில் நடைபெறவுள்ளதால், தேர்தல் ஆணையம் ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் இருந்துக் கொண்டு சிறப்பு தீவிர வாக்காளர் சீராய்வினை (SIR) அமல்படுத்தும் பணியை தொடங்கியுள்ளது. இதனை எதிர்த்து முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்களின் ஆணைக்கிணங்க, வருகின்ற 11.11.2025 செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணி அளவில், கடலூர், மஞ்சக்குப்பம், தலைமை அஞ்சல் நிலையம் எதிரில் கடலூர் மாவட்ட திமுக உள்ளிட்ட மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகளின் சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது.

அதுசமயம், இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்த, திராவிட முன்னேற்றக் கழகம் உள்ளிட்ட மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகளின் மாநில, மாவட்ட கழக நிர்வாகி கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், கிளை, வார்டு, கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் ஒன்றிய. பெருந்தலைவர்கள், நகரமன்ற தலைவர்கள், பேரூராட்சி மன்ற தலைவர்கள், மண்டலக்குழு தலைவர்கள், முன்னாள், உள்ளாட்சி பிரதிநிதிகள், முன்னாள், மாவட்ட ஊராட்சிக்குழு, ஒன்றியக்குழு உறுப்பினர்கள், மற்றும் நகராட்சி, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள்,

மாநகர, மாவட்ட, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் இளைஞரணி, மாணவரணி, மகளிரணி, மகளிர் தொண்டரணி, வழக்கறிஞர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, தொண்டரணி, தொழிலாளர் அணி, மீனவரணி, நெசவாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவர் அணி, வர்த்தகர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு அணி , சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு, தகவல் தொழில்நுட்ப பிரிவு அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி மற்றும் தொழிலாளர் முன்னேற்றச்சங்கம் ஆகிய அணிகளின் நிர்வாகிகள், கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்த திமுக உள்ளிட்ட மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகளின் கழக முன்னோடிகள், தோழர்கள், பொதுமக்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

கடந்த மூன்று ஆண்டுகளில் 6,453 மெட்ரிக் டன் கொள்முதல்:

கேழ்வரகு கொள்முதல் இம்மாதம் முதல் தொடர்ந்து நடைபெறும்!

அமைச்சர் அர.சக்கரபாணி தகவல்!

சென்னை, நவ.10-

தமிழ்நாட்டில் திராவிட மாடல் ஆட்சியில் கடந்த மூன்று ஆண்டுகளில் 6453 மெட்ரிக் டன் கேழ்வரகு கொள்முதல் செய்யப்பட்டு 3578 விவசாயிகளுக்கு ரூ. 26.48 கோடி வழங்கப்பட்டுள்ளது எனவும் நவம்பர் மாதம் முதல் தருமபுரி, கிருஷ்ணகிரி, ஈரோடு மற்றும் சேலம் ஆகிய நான்கு மாவட்டங்களில் கேழ்வரகு கொள்முதல் தொடர்ந்து செய்யப்படும் எனவும் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல்துறை அமைச்சர் அர. சக்கரபாணி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு :-

பரவலாக்கப்பட்ட கொள்முதல் திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டில் கேழ்வரகு கொள்முதல் திட்டம், கடந்த 2022-2023 கொள்முதல் பருவத்தில் முதற் கட்டமாக தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் அறிமுகப்படுத்தப்பட்டு, 514 மெட்ரிக் டன் கொள்முதல் செய்யப்பட்டது. இரண்டாம் கட்டமாக 2023-2024 கொள்முதல் பருவத்தில் ஈரோடு மற்றும் சேலம் மாவட்டங்களையும் சேர்த்து, 4 மாவட்டங்களில் மொத்தம் 1,889 மெட்ரிக் டன் கேழ்வரகு கொள்முதல் செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து, கடந்த 2024-2025 கொள்முதல் பருவத்தில், தருமபுரி, கிருஷ்ணகிரி, ஈரோடு மற்றும் சேலம் மாவட்ட விவசாயிகளிடமிருந்து 4050 மெட்ரிக் டன் கேழ்வரகு கொள்முதல் செய்யப்பட்டது.

கடந்த மூன்றாண்டுகளில் 6453 மெட்ரிக் டன் கேழ்வரகு கொள்முதல் செய்யப்பட்டு 3578 விவசாயிகளுக்கு ரூ. 26.48 கோடி வழங்கப்பட்டுள்ளது.

நடப்பாண்டு நவம்பர் மாதத்திலிருந்து, விவசாயிகளிடமிருந்து கேழ்வரகு மெட்ரிக் டன் ஒன்றிற்கு ரூ.48860 என்ற ஆதார விலையில் (Minimum Support Price) கொள்முதல் செய்யப்படும்.

நடப்பு 2025-2026-கொள்முதல் பருவத்தில் 01.11.2025 முதல் 31.01.2026 வரை தருமபுரி, கிருஷ்ணகிரி, ஈரோடு மற்றும் சேலம் மாவட்டங்களில் நேரடி கேழ்வரகு கொள்முதல் நிலையங்கள் திறந்து விவசாயிகளிடமிருந்து 6000 மெட்ரிக் டன் கேழ்வரகு கொள்முதல் செய்ய தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு தமிழ்நாடு அரசால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டில் கொள்முதல் விலையான மெட்ரிக் டன் ஒன்றிற்கு ரூ.42900 என்பதை விட இந்த ஆண்டு மெட்ரிக் டன் ஒன்றிற்கு ரூ.5960 கூடுதலாகும்.

ஆதலால் இந்த நல்வாய்ப்பினைப் பயன்படுத்தி, தருமபுரி, கிருஷ்ணகிரி, ஈரோடு மற்றும் சேலம் மாவட்ட கேழ்வரகு விவசாயப் பெருங்குடி மக்கள், தாங்கள் விளைவித்த கேழ்வரகினைத் தங்கள் மாவட்டங்களில் திறக்கப்பட்டுள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நேரடி கேழ்வரகு கொள்முதல் நிலையங்களில் விற்பனை செய்து பயன்பெறுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் அர.சக்கரபாணி தெரிவித்துள்ளார்.

விழுப்புரம் மாவட்டம், மரக்காணம் ஒன்றியம், கீழ் எடையாளம் ஊராட்சி கன்னிகாபுரம் அரசு தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக தரம் உயர்த்தப்பட்டதை அடுத்து பள்ளியில் 6 ஆம் வகுப்பில் புதிய மாணவர்கள் சேர்க்கையை முன்னாள் அமைச்சர் செஞ்சிமஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார். உடன் திண்டிவனம் மாவட்டதொடக்கக்கல்வி அலுவலர் இளம்மதி, மரக்காணம் தயாளன், மயிலம் யோகேஸ்வரி மணிமாறன், பழனி, ரவிக்குமார், மணிமாறன், ரவிச்சந்திரன், மனோகரன் உள்ளனர்.

முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவை விதி எண்.110ன் கீழ் வெளியிட்ட அறிவிப்பிற்கிணங்க, மாமேதை காரல் மார்க்ஸ் அவர்களுக்கு சென்னை, எழும்பூர் அரசு அருங்காட்சியக வளாகத்தில் திருவுருவச் சிலை அமைத்திட உத்தரவிடப்பட்டதன் அடிப்படையில், பூவிருந்தவல்லியில் நடைபெற்று வரும் மாமேதை காரல் மார்க்ஸ் அவர்களின் சிலை வடிவமைக்கும் பணிகளை அமைச்சர் மு. பெ. சாமிநாதன் அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, பணிகளை விரைந்து முடிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

நவ.27. துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள்:

ஆதி திராவிடர் நலக்குழு சார்பில் நல உதவிகள் வழங்கி சிறப்பாக கொண்டாடுவோம்!

ஆதி திராவிடர் நலக்குழுக் கூட்டத்தில் தீர்மானம்! ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. அறிவிப்பு!

சென்னை,நவ.10-

தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு மாநில நிர்வாகிகள் கூட்டம் நேற்று (09-11-2025) காலை 10.30 மணி அளவில் சென்னை, அண்ணா அறிவாலயத்திலுள்ள கழக அலுவலகத்தில் தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழுத் தலைவர் மருதூர்ஏ.இராமலிங்கம் அவர்கள் தலைமையில், துணைத்தலைவர் மாண்புமிகு அமைச்சர் மா.மதிவேந்தன், இணைச் செயலாளர்கள் புஷ்பராஜ், முன்னாள் எம்.எல்.ஏ., வி.பி. இராஜன், திப்பம்பட்டி ஆறுச்சாமி, துணைச் செயலாளர்கள் பா. துரைசாமி, மு.பொன்தோஸ், மு. பரமானந்தம், சி. தசரதன், சா. இராசேந்திரன், மாரியப்பன் கென்னடி, முன்னாள் எம்.எல்.ஏ., கொ.ரமேஷ் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழுச் செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி, எம்.எல்.ஏ., அவர்கள் ஆதிதிராவிடர் நலக்குழுவின் ஆக்கப் பணிகள் குறித்து உரையாற்றினார்.

சென்னை வடக்கு, சென்னை வடகிழக்கு, சென்னை கிழக்கு, சென்னை மேற்கு, சென்னை தென்மேற்கு, சென்னை தெற்கு, திருவள்ளூர் கிழக்கு, திருவள்ளூர் மத்திய, திருவள்ளூர் மேற்கு, காஞ்சிபுரம் வடக்கு, காஞ்சிபுரம் தெற்கு, இராணிப்பேட்டை, வேலூர் ஆகிய மாவட்டங்களின் ஆதிதிராவிடர் நலக்குழு மாவட்ட அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட இரங்கல் தீர்மானம் வருமாறு:-

1. 23.10.2025 அன்று உடல்நலக் குறைவால் நம்மைவிட்டு மறைந்த சேந்தமங்கலம் சட்டமன்ற உறுப்பினர் கே.பொன்னுசாமி அவர்களுக்கு தி.மு.க ஆதிதிராவிடர் நலக்குழு ஆழந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.

கரூரில் நெரிசலில் சிக்கி உயிரிழந்த 41 நபர்களின் குடும்பங்களுக்கு தி.மு.க ஆதிதிராவிடர் நலக்குழு ஆழந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

2025 செப்டம்பர் 17 ஆம் நாள் கரூரில் நடைபெற்ற கழக முப்பெரும் விழாவில் ஆதிதிராவிடர் நலக்குழு தலைவர் திரு. மருதூர் இராமலிங்கம் அவர்களுக்கு பேராசிரியர் விருது வழங்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கழக தலைவர் அவர்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

நவம்பர் 27-ல், பிறந்த நாள் காணும் நமது கழக இளைஞர் அணி செயலாளரும் தமிழ்நாடு துணை முதலமைச்சருமான திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு ஆதிதிராவிடர் நலக்குழு சார்பில் மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பேரூர், பகுதி மற்றும் வார்டுகளில் கழக இருவண்ண கொடியேற்றி, இனிப்புகள் வழங்கி கொண்டாட வேண்டும், மேலும் ஆதிதிராவிடர் மக்கள் வசிக்கும் பகுதிகளில் பொதுக்கூட்டங்கள் நடத்தி, ஏழை யெளி மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்க வேண்டும்.

கரூரில் நெரிசலில் சிக்கி பலியானவர்களுக்கு இரங்கல்!

கரூரில் நெரிசலில் சிக்கி உயிரிழந்த 41 நபர்களின் குடும்பங்களுக்கு தி.மு.க ஆதிதிராவிடர் நலக்குழு ஆழந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது. கரூரில் ஒரு நடிகரின் கட்சி நடத்தி பொதுக்கூட்டத்தில் ஏற்பட்ட நெரிசலில் 41 பேர் சிக்கி உயிரிழந்த செய்தி அறிந்த சில மணி நேரங்களில் போர்க்கால நடவடிக்கை எடுத்ததுடன், உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு தலா பத்து லட்ச ரூபாய் நிவாரணநிதி அளிக்கப்படும் என்று அறிவித்ததோடு நில்லாமல், நள்ளிரவே கரூருக்குச் சென்று, ஆய்வு செய்ததுடன், உயிரிழந்த 40 பேரின் உடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்தி அவர்கள் குடும்பத்திற்கு ஆறுதல் சொல்லிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களுக்கு இக் கூட்டம் தனது பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறது.

கண்ணகி நகர் வீராங்கணைக்கு பாராட்டு!

சென்னை, கண்ணகி நகர் குடியிருப்புப் பகுதியின் பிம்பத்தையே மாற்றியமைக்கும் ஒரு மகத்தான சாதனையை நிகழ்த்திக் காட்டியிருக்கிறார் 18 வயது கபடி வீராங்கனை கார்த்திகா. அண்மையில் பஹ்ரைனில் நடைபெற்ற 18 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய இளைஞர் விளையாட்டுப் போட்டிகளில் இந்திய மகளிர் கபடி அணியின் துணைத் தலைவராக தங்கம் வென்று, நமது முதலமைச்சர் அவர்களின் பொற்கரங்களால் 25 லட்சம் ரூபாய் பெற்று தமிழகத்திற்கும் இந்தியாவிற்கும் பெருமை சேர்த்தமைக்கு வாழ்த்துக்களை தி.மு.க ஆதிதிராவிடர் நலக்குழு தெரிவித்துக் கொள்கிறது. மேலும் பஹ்ரைனில் நடைபெற்ற 18 வயதுக்குட்பட்டோருக்கான ஆடவர் இந்திய கபடி போட்டியில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் பிறந்த திருவாரூர் மாவட்டத்தை சார்ந்த அபினேஷ் என்ற வீரர் தங்கம் வென்று, மாண்புமிகு நமது முதலமைச்சர் அவர்களின் பொற்கரங்களால் 25 லட்சம் ரூபாய் பெற்று தமிழகத்திற்கும் இந்தியாவிற்கும் பெருமை சேர்த்தமைக்கு வாழ்த்துக்களை தி.மு.க ஆதிதிராவிடர் நலக்குழு தெரிவித்துக் கொள்கிறது.

சாதி பெயர்களை நீக்கியதற்கு நன்றி!

தமிழ்நாட்டில் தெருக்களில் உள்ள சாதி பெயர்களை நீக்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியை தி.மு.க ஆதிதிராவிடர் நலக்குழு தெரிவித்துக் கொள்கிறது.

(SIR) வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர சீராய்வு என்ற பெயரில் ஆதிதிராவிடர்கள்மற்றும்சிறுபான்மையினர் வாக்குகளை திருட நினைக்கும் ஒன்றிய பா.ஜ.க அரசுக்கு தி.மு.க ஆதிதிராவிடர் நலக்குழு கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறது

தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் நிர்வாகிகள் மாண்புமிகு தமிழ்நாடு முதமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் உத்தரவின்படி, தத்தமது பகுதிகளில் உள்ள கழக

BLA-2களுடன் இணைந்து வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணி(SIR)களில் ஈடுபட்டு ஒவ்வொரு வாக்காளரையும் சேர்த்திடும் பணிகளில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திட வேண்டுமென இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன

தி.மு.க. ஆதி திராவிடர் நலக்குழு மாநில நிர்வாகிகள் கூட்டத்தில் மாநிலச் செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி தீர்மானங்களை விளக்கி சிறப்புரையாற்றினார். இதில் தி.மு.க. ஆதி திராவிடர் நலக்குழு நிர்வாகிகள் பங்கேற்றனர்.